<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

**<u>MCOP No.114/2020</u>** 16.10.2025 **எ.ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கபிலன் | தொழில் | |
| த/பெ | சண்முகசுந்தரம் | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| ஜாதி | | மாவட்டம் | |
| சமயம் | | | |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் செஞ்சேரி புத்தூரில் குடியிருக்கிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். 27.6.2020 தேதியில் TN 18 M 97 99 என்ற டிப்பர் லாரியை நான் தான் ஓட்டினேன். நான் மேற்படி தேதியில் செஞ்சேரி புத்தூரிலிருந்து சடையபாளையம் நோக்கி மேற்படி லாரியை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்தேன். சடையபாளையம் செட்டி தோட்டம் அருகில்தோட்டம் அருகில் ஒரு இருசக்கர வாகனம் மேற்படி சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது மேற்படி இருசக்கரவாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்தார்கள். மேற்படி வாகனம் சாலையில் குறுக்கும் நெடுக்குமாக வந்ததை பார்த்து நான் என்னுடைய வாகனத்தை மண் ரோட்டில் இறக்கி நிறுத்தி விட்டேன். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் என்னுடைய வாகனத்தின் வலது பின்புற சக்கரத்தில் மோதிவிட்டார். நான் என்னுடைய வாகனத்தை இடதுபுற ஓரமாக நிறுத்தி விட்டேன். இந்த விபத்திற்கு இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் தான் காரணம். அவர் மதுபோதையில் இருந்தார். அவர் எனக்கு ஏற்கனவே தெரிந்தவர். இந்த விபத்திற்கு நான் காரணம் அல்ல. மேற்படி தேதியில் நான் மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கு எனக்கு கனரக வாகன ஓட்டுநர் உரிமம் இருந்தது.

**4–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவ தினத்தில் எனக்கு கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல வைத்திருந்தேன் ஆனால் தொலைந்துவிட்டது. அன்றைய தேதியில் எனக்கு இலகுரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமை மட்டுமே வழுங்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமத்தின் நகலை RTO அலுவலகத்தில் இருந்து பெற்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து தொடர்பாக நெகமம் காவல் நிலையத்தில் குற்ற எண் 971/2020 என்ற வழக்கு எனக்கு எதிராகத்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தான் இருசக்கர வாகனத்தின் மீது கவனக்குறைவாக மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

**மனுதாரர்தரப்பு குறுக்கு விசாரணை**

2. விபத்து சமயத்தில் நான் ஓட்டி வந்த வாகனம் காலியாக தான் இருந்தது. மேற்படி தேதியில் நான் அனுமதி இல்லாமல் கிராவல் மண்ணை இறக்கி விட்டு விட்டு வேகமாக மேற்படி லாரியை ஓட்டி வந்ததால் தான் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் நடந்த சாலை 12 அடி அகலம் கொண்டது என்று சொன்னால் சரியல்ல 8 அடி அகலம் கொண்டது. விபத்து நடந்தவுடன் நான் ஓட்டி வந்த வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டி சென்று விட்டேன் என்றால் சரிதான். காயம்பட்டவரை உடனடியாக மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று முதலுதவி சிகிச்சை எதையும் நான் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து நான் வாகனத்தை ஓட்டி வந்தபோது விபத்து சாலையின் வலது புறம் நடந்தது.

3. விபத்திற்கு நான் தான் காரணம் என்றாலும் அதனால்தான் வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டிச் சென்று விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. முறையான ஓட்டுநர் உரிமம்இல்லை என்றும் அஜாக்கிரதையாகவும்

அதிவேகமாகவும் மேற்படி வாகனத்தை இயக்கி நான்தான் விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. முறையான ஓட்டுநர் விருது என்று அஜாக்கிரதையாகவும் அதிவேகமாகவும் மேற்படி வாகனத்தை இயக்கி நான்தான் விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் காரணம் என்பதால் நான் ஓட்டியிருந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.16 19:22:41 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

**<u>MCOP No.114/2020</u>** 16.10.2025 எ. ம.சா.2

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் நவீன் | தொழில் |
| த/பெ | கிராமம் |
| வயது | தாலுகா |
| ஜாதி | மாவட்டம் |
| சமயம் | |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சூலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்று வருகிறேன் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் சொல்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட சண்முகசுந்தரம் மகன் கபிலன் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து இலகுரக வாகனம் மற்றும் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் வழங்கப்பட்டது. அவருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் வழங்கப்படவில்லை. அவருக்கு வழங்கப்பட்ட **ஓட்டுநர் உரிமத்தின் சான்றிட்ட நகல் சா.சாஆ.1.**

**மனுதாரர், 1, 2, எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டது.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.16 19:22:47 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.